எடுக்கும். கன்னியாகுமரி, தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களில் முதல் கட்டமாக இந்த உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளிலும் அடிப்படை வசதிகளாகிய அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் பல்வேறு சாதனங்களை வாங்குவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தற்சமயம் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருகின்ற நிதியாண்டிலேயே அத்தனை வேலைகளையும் முடிக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் ஓர் உத்தரவு இட்டிருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைத்தது மட்டும் அல்லாமல், அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளிலே அறுவை சிகிச்சை செய்கின்றபோது வசூலிக்கப்படுகின்ற தொகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு இருக்கிறது, 1997–லேயே சட்டம் இயற்றியிருக்கிறார்கள்; அதை மாற்றியமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்திலே பல தனியார் மருத்துவமனைகளிலே இறந்துபோனவர்களின், சடலத்தை உள்ளேயே வைத்து treatment கொடுத்ததாக பல இலட்சம் ரூபாய் கேட்டார்கள். இராயபுரத்திலே சில மாதங்களுக்கு முன்னாலே பெரிய போராட்டம் நடந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. (குறுக்கீடு) வினா எண் 208, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம்.

208—

ஆரம்ப சுகாதார நிலையம்

***48762—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2005 மார்ச் 28]

(அ) முசிறி தொகுதி, புத்தனம்பட்டி ஊராட்சியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், புத்தனம்பட்டி கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில், சிறுகாம்பூர் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனைக்கு தரத்தை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்து, கட்டட வசதியைச் செய்து தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் புத்தனம்பட்டியில் ஓர் அரசு மருத்துவமனை அமைப்பதற்குக் கேட்டிருந்தேன். அதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். இருந்தபோதிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் இந்த 4 ஆண்டுகளாக கேட்டதையெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த அன்னை, 10 வருடங்களாக திருச்சி – நாமக்கல் சாலை, தி.மு.க. ஆட்சியில் கேட்பாரற்ற நிலையிலிருந்த அந்தச் சாலைக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்தும், முசிறி – புலிவலம் சாலைக்கு 20.98 இலட்சத்தை நிதி ஒதுக்கீடு செய்தும், எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த அந்த அன்னைக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். இந்த புத்தனம்பட்டி பகுதி சிறிய ஊராட்சி. இருந்தபோதிலும், அந்தப் பகுதியில், புத்தனம்பட்டியில் மட்டும் 3,500 மக்கள் தொகை இருக்கின்றது. அதைச் சுற்றியுள்ள சாத்தனூர், நரேந்திரபுரம், வெள்ளக்கல்பட்டி, அவனிமங்கலம் ஆகிய ஊர்களைச் சேர்த்து, ஆக மொத்தம் 5,300 பேர் மக்கள் தொகை இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் அங்கு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு

இருக்கக்கூடிய புத்தனம்பட்டி அரசு கலைக் கல்லூரி இருக்கின்றது. அந்தக் கலைக் கல்லூரியில் மட்டும் 3,000–க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கல்வி பயின்றுகொண்டு இருக்கின்றார்கள். எல்லோரையும் சேர்த்தால் 12,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கு இருப்பதினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்தப் பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதி ஆண்டிலே நிதிநிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

209—

சிறு தொழில்

*** 39024—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துறை மூலம் மகளிருக்கு சிறு தொழில் தொடங்க அரசு உதவி புரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகைத் திட்டம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் ஆண்/பெண் தொழில் முனைவோர்களுக்கு தங்களது திட்டங்களுக்குப் பெறும் வங்கிக் கடனுக்கு 20 முதல் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வழங்கப்படும் திட்டம் தற்போது